முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 618**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

08.06.2021, செவ்வாய்கிழமை

1. கருணைவடிவாய் வந்த அரங்கனே
கலியுகத்தின் சிறந்த தலைவனே
பெருமைமிக்க ஞானயுகம் படைக்க
பிரணவசக்தியாய் சித்தியுமாகவந்த ஞானதேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தேற்றம்பெற ஞானஅறிவுரை ஆசிதன்னை
ஆசிபட பிலவ விடை திங்களில்
அருளுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே
3. இனிதே அரங்கனுக்குள் என்சக்தி
இணையில்லா மகாசூட்சுமமாய் கலந்திருக்க
துணிவுபட அரங்கன் கொள்கைஏற்று
தொண்டாற்றி உலகசேமம் கருதிஇயங்கும்
4. இயங்குகின்ற தொண்டர்படைகள் மூலமாக
இந்தஉலகமே பாதுகாப்பு பெறக்கூடும்
தயங்காது அரங்கன்தர்மத்தை செய்துகொண்டு
தவராஜன்காட்டும் சன்மார்க்கநெறி மீறாவாழும் மக்களுக்கு
5. மக்களுக்கு பேரிடரால் துன்பமில்லை
மக்களுக்கு மரணமில்லை மறுமையுமில்லை
தேக்கமின்றி ஆசிதந்து தீட்சையாக
திருவருளை அரங்கன்வழியான் அருளிவர
6. அருளோடு அரங்கன் தர்மதொண்டு
அளவில்லா செய்துகொண்டு பொருளுதவியோடு
அரங்கன்மகிழவே சேவையாற்றும் மக்களெல்லாம்
ஆறுமுகன்என்னால் இந்தகலியில் தேர்ந்தெடுக்கப்பட்டு
7. தேர்ந்தெடுக்கப்பட்டு ஞானவான்களாகி
தேசிகன் விரும்புகின்ற ஞானயுகமாற்றம்
நேர்த்தியாய் சடுதி உலகமாற்றமாக
நிலவுலகில் நடந்தேறி ஞானஆட்சி மலரக்கூடும்

ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.